T.C = 043

018/DM/21

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I-GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

(அ) பின்வரும் பாடலின் ஆசிரியரைப் பொருத்தி காட்டுக. (5 × 1 =5)

1. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே – கவிமணி

2. சபைகளிலே தமிழெழுத்து முழங்க வேண்டும் – நாமக்கல் கவிஞர்

3. பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும் – பாரதியார்

4. எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – பாரதிதாசன்

5. பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் – கண்ணதாசன்

(ஆ) சரியான விடையை பொருத்துக. (5 × 1 =5)

1. குறிஞ்சி – மணலும், மணல் சார்ந்த இடமும்

2. முல்லை – வயலும், வயல் சார்ந்த இடமும்

3. மருதம் – மலையும், மலை சார்ந்த இடமும்

4. நெய்தல் – காடும், காடு சார்ந்த இடமும்

5. பாலை – கடலும், கடல் சார்ந்த இடமும்

[Turn over

II. பின்வரும் தொடர்களை வாக்கியத்தில் அமைக்க : (5 × 1 = 5)

1. பழக்க வழக்கம்
2. அல்லும் பகலும்
3. பேரும் புகழும்
4. தொன்று தொட்டு
5. ஊணுறக்கமின்றி.

III. பின்வரும் பகுதியிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : (5 × 1 = 5)

கன்னில் கலந்தான் கறத்தில் கலந்தான் எண்

எண்ணில் கலந்தே இறுக்கின்றான் – பன்னி

பலந்தான் என் பாட்டில் கலந்தான் உயிறில்

களந்தான் கறுனை கலந்து.

IV. கீழ்வரும் பகுதிகளைப் பல வடிவங்களாக எழுதுக. (5 × 2 = 10)

1. போ
2. கல்
3. பிளிறு
4. அடக்கு
5. பெறு.

V. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. (5 × 1 = 5)

1. மரபுப் பிழைகளை நீக்குக :
   காகம் கத்தும்
2. வினை மரபுப் பிழைகளை நீக்குக :
   முறுக்கு சாப்பிட்டு தண்ணீர் அருந்தினான்
3. வழூஉச் சொற்களை நீக்குக :
   புலவர் வந்தார்கள்
4. சந்திப் பிழைகளை சிந்தித்து எழுதுக :
   கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
5. ஒருமை பன்மை பிழை நீக்குக :
   கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்

VI. வாக்கிய மாற்றம் செய்க. (5 × 1 = 5)

1. உரை கவிதாவால் படிக்கப்பட்டது

(செய்வினை வாக்கியமாக மாற்றுக)

2. கவிஞர் சங்கத் தமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார்

(நேர் கூற்றுத் தொடராக மாற்றுக)

3. கண்ணகி, “பாண்டிய மன்னா, என் கணவன் கள்வன் அல்லன்”

(உரையாடலை செய்தியாக்குக)

4. அழைப்பு மணி ஒலித்தது, கயல்விழி கதவைத் திறந்தார்.

(தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

5. கண்ணன் பாடம் படித்தான்

(எதிர்மறைத் தொடராக்குக)

**VII. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக.** (1 × 10 = 10)

குறிப்பு :கீழ்க்காணும் வினாவிற்கான விடையெழுதுவோர் தேவையான இடங்களில் xxx yyy zzz என்னும் பொதுக் குறியீடுகள் தவிர கடிதத்தின் எந்தப் பகுதியிலும் வேறு எந்தவிதக் குறிப்புகளையும் எழுதுதல் கூடாது. பெயர், முகவரி, ஊர், பதிவெண் ஆகியவை எழுதுதல் கூடாது.

1. தெரு மின்விளக்கு பழுது நீக்க வேண்டி மின்வாரிய செயற்பொறியாளருக்கு கூட்டு விண்ணப்பம் வரைக.

2. மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

3. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்த உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

**VIII. பின்வரும் உரைநடைப் பகுதியை கருத்து சிதையாமல் மூன்றில் ஒரு பங்காக சுருக்கி வரைக.** (1 × 10 = 10)

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து அதன் பாலை ருசித்து நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவன் நான். அவித்து, காய்ந்து குத்திய அந்த சோறாகு முன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவன் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப்புழுங்கலரிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழைய சோறு அல்லது பழையது. காத்திருந்து சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம் போல் குடிப்பது ஒரு வகை, வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால் வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்ந்து கொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்ட வைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம் ! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு அது கிராமத்தின் உன்னதம்.

**IX.** **பின்வரும் தலைப்புகளில் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் 400 சொற்களுக்கு (இரண்டு பக்கங்கள்) குறையாமல் எழுதுக.** (2 × 10 = 20)

1. (அ) தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் கணினியின் பங்கை விளக்குக.

(அல்லது)

(ஆ) தீ விபத்தும் பாதுகாப்பு முறைகளும்

2. (அ) சாலை பாதுகாப்பு

(அல்லது)

(ஆ) நூலகத்தின் பயன்கள்.

**X.** **பின்வரும் பகுதியைப் படித்து பொருளுணர்ந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (10 × 2 = 20)

தென்றல் அசைந்து வரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும், வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங்கமழும், கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். அத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த்திவலைதன் பாலாவி போற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக்குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச்செடி, கொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருவதால் நலிந்த உடலைத் தேற்றும் நன் மருந்தாகும்.

வினாக்கள்.

1. தென்றல் அசைந்து வரும் நாடு எது?
2. தென் தமிழ் நாட்டில் மழைவளம் படைத்த பழம்பதி எது?
3. உரைப்பத்தியில் இடம் பெற்றுள்ள மரங்களின் பெயர்களைக் கூறு.
4. நறுமணம் வீசும் மலர்கள் எவை?
5. தோகை விரித்தாடும் பறவை எது?
6. தமிழ் பாட்டிசைக்கும் உயிரினம் எது?
7. அருவியினின்று சிதறும் நீர்த்திவலைகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது?
8. திருக்குற்றால மலையில் எக்காலத்தில் பூங்காற்று வீசும்?
9. பூங்காற்று எதன் நலங்களைக் கவர்ந்து வரும்?
10. மெல்லிய பூங்காற்றின் பயன் யாது?

———————